வணக்கம்

ஆகாஷ்வாணி-புதுச்சேரி

மாநிலச் செய்திகள்

வாசிப்பவர்-நாராயணசாமி

தேதி 8.3.2025 நேரம் மாலை 6.10 மணி

-------------------------------------------------------

தலைப்புச் செய்திகள்

நாட்டின் பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வேண்டும் என்று குடியரசுத் தலைவர் திருமதி திரவுபதி முர்மு வலியுறுத்தி உள்ளார்.

அடுத்த 5 ஆண்டுகளில் 3 கோடி லட்சாதிபதி சகோதரிகளை உருவாக்க மத்திய அரசு இலக்கு நிர்ணயித்து உள்ளதாக பிரதமர் திரு நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு மும்பை-சீரடி வந்தே பாரத் விரைவு ரயில் முழுவதும் பெண்களால் இயக்கப்பட்டது.

நமது பாரத நாடு பெண்களை போற்றும் மரபை கொண்டுள்ளதாக துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் தெரிவித்துள்ளார்.

முர்மு 1(18)

உலகின் 3 ஆவது மிகப் பெரிய பொருளாதார நாடாக இந்தியா முன்னேறி வரும் நிலையில், பெண் தொழிலாளர்களின் எண்ணிக்கை அதிக அளவில் இருக்க வேண்டும் என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு வலியுறுத்தி உள்ளார். சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, “பெண்கள் சக்தியினால் வளர்ச்சி அடைந்த பாரதம் ” என்ற கருப்பொருள் அடிப்படையில் இன்று புதுடெல்லியில் நடைபெற்ற மாநாட்டில்

பேசுகையில் இவ்வாறு வலியுறுத்திய குடியரசு தலைவர், முன்னேறிய பாரதம் என்ற தொலைநோக்கு பார்வையை நனவாக்கும் முயற்சியில் பாரதத்தின் பெண்கள் முக்கிய பங்காற்றி வருவதாக தெரிவித்தார். பெண்களின் முன்னேற்றத்திற்கும், அவர்களின் திறமையை வெளிக் கொணரவும் நமது சமூகம் தகுந்த சூழலை உருவாக்கித் தர வேண்டும் என்றும் திருமதி முர்மு கூறினார்.

நாட்டில், பெண்கள், அரசியல், பொருளாதாரம் மற்றும் சமூக ரீதியில் அதிகாரம் பெற மத்திய அரசு தொடர்ந்து பாடுபட்டு வருவதாகவும், இதனால் அவர்கள், முன்னேறிய பாரதம் என்ற குறிக்கோளை எட்ட நாட்டை வழிநடத்துவதாகவும் தெரிவித்தார். நாரி சக்தி வந்தன் அதி நியம் போன்ற முன்னெடுப்புகள் மூலம் நாடாளுமன்றம் மற்றும் மாநில சட்டப்பேரவைகளில் பெண்களுக்கு உரிய இட ஒதுக்கீட்டினை வழங்கும்



ஏற்பாடு, பெண்களுக்கான அரசியல் அதிகாரம் அளித்தலின் வரலாற்று சிறப்புமிக்க நடவடிக்கை என்றும் குறிப்பிட்டார். சுய உதவி குழுக்களுடன் பெண்களை இணைத்தல், பொருளாதார ரீதியில் சுயசார்பு நிலையை எட்ட மகளிருக்கு உதவும் லட்சாதிபதி சகோதரி திட்டம், நமோ டிரோன் சகோதரி திட்டம் போன்ற முன்னெடுப்புகள் பொருளாதாரம் மற்றும் தொழில்நுட்ப ரீதியில் பெண்களை முன்னெற்றம் அடைய செய்யும் என்றும் குறிப்பிட்டார். மத்திய அரசின் பல்வேறு முயற்சிகள் பெண்களுக்கு பல்வேறு நிலைகளில் நம்பிக்கையை வலுப்படுத்தி புதிய உயரங்களை அவர்களின் வாழ்வில் எட்ட உதவும் எனவும் குறிப்பிட்டார். சர்வதேச மகளிர் தினம், பாலின சமத்துவத்தை மறு உறுதி செய்து, பெண்களின் மகத்தான பங்களிப்பை கவுரவிக்கும் நேரம் என்று குடியரசு தலைவர் திருமதி திரவுபதி முர்மு தெரிவித்தார். மத்திய சட்டம் மற்றும் நீதித்துறை அமைச்சர் திரு அர்ஜீன் ராம் மெக்வால், பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு அமைச்சர் திருமதி அன்னபூர்ணாதேவி உள்ளிட்டோரும் நிகழ்ச்சியில் பேசினர். பெண்கள் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டு

அமைச்சகத்தின் இணையமைச்சர் திருமதி சாவித்ரி தாக்கூர், செயலர் திரு அணில் மாலிக், பெண் நாடாளுமன்ற உறுப்பினர்கள், பத்ம விருதாளர்கள், பாதுகாப்பு படையை சேர்ந்த பெண் அதிகாரிகள் மற்றும் பல்வேறு துறைகளை சார்ந்த புகழ் பெற்ற பெண்கள் மாநாட்டில் பங்கேற்றனர்.

*பிரதமர்-நவ்சாரி* 1 (18)

மகளிர் அதிகாரமளித்தலுக்காக மத்திய அரசு அர்ப்பணிப்புடன் செயல்படுவதாக பிரதமர் திரு நரேந்திர மோடி கூறியுள்ளார். இன்று குஜராத் மாநிலம் நவ்சாரி நகரில் சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற லட்சாதிபதி சகோதரி மாநாட்டில் உரையாற்றும் போது இவ்வாறு தெரிவித்த பிரதமர், பெண்கள் முன்னேற்றத்திற்காக தமது அரசு மேற்கொண்ட நடவடிக்கைகளை சுட்டிக் காட்டினார். பெண்களின் கண்ணியம் மற்றும் நல்வாழ்விற்காக ஒவ்வொரு நிலையிலும் அளிக்கப்படும் முக்கியத்துவம் காரணமாக இந்தியா, மகளிர் தலைமையிலான வளர்ச்சியை நோக்கி முன்னேறி வருவதாக பிரதமர் குறிப்பிட்டார். நாடெங்கிலும் பல்லாயிரக் கணக்கான கழிப்பறைகளை மத்திய அரசு கட்டி வருவதன் மூலம் பெண்களின் அடிப்படை சுகாதாரம் மற்றும் தனியுரிமை உறுதி செய்யப்பட்டுள்ளதாகவும், இது அவர்கள் கண்ணியமாக வாழ வழி கோல்வதாகவும் பிரதமர் குறிப்பிட்டார். சமுதாயத்தின் அனைத்து துறைகளிலும் மகளிருக்கு அதிகாரம் அளிக்கப்படுவதால், இந்திய பெண்களின் சக்தி உலக அளவில் அங்கீகரிக்கப்படுவதாகவும் பிரதமர் தெரிவித்தார். நாட்டின் முன்னேற்றத்தில் சுய உதவிக் குழுக்களின் பங்களிப்பை புகழ்ந்த பிரதமர், தற்போது, மகளிருக்கு அதிகாரம் அளிக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ள

*பிரதமர்-நவ்சாரி* 2 (17)

மத்திய அரசு, அடுத்தக்கட்ட நடவடிக்கையாக, அடுத்த 5 ஆண்டுகளில் 3 கோடி லட்சாதிபதி சகோதரிகளை உருவாக்க இலக்கு நிர்ணயித்து உள்ளதாகவும் பிரதமர் தெரிவித்தார்.

கடந்த 10 ஆண்டுகளில் பெண்கள் பாதுகாப்பை அதிகரிப்பதற்கான மத்திய அரசின் சாதனைகளை பட்டியலிட்ட பிரதமர், புதிய குற்றவியல் சட்டங்கள் பெண்களின் உரிமையை பாதுகாப்பதற்காக வடிவமைக்கப் பட்டுள்ளதாகவும் தெரிவித்தார். சமீப காலமாக பல்வேறு துறைகளில் பெண்களின் பங்களிப்பு குறிப்பிடத்தக்க வகையில் அதிகரித்து உள்ளதாகவும் பிரதமர் கூறினார். நிகழ்ச்சியின் போது குஜராத் மாநிலத்தின் பெண்களுக்கான கூட்டுறவு திட்டங்கள் உள்ளிட்ட பல்வேறு திட்டங்களை பிரதமர் பாராட்டினார். லட்சாதிபதி சகோதரிகள் மாநாட்டின் போது, 25 ஆயிரம் சுய உதவிக் குழுக்களை சேர்ந்த இரண்டரை லட்சம் பெண்களுக்கு 450 கோடி ரூபாய் நிதி உதவிகளையும் பிரதமர் வழங்கினார். மேலும், 5 லட்சாதிபதி சகோதரிகளுக்கு, லட்சாதிபதி சகோதரிகள் சான்றிதழ்களையும் வழங்கினார். குஜராத் மாநிலத்தின் G-SAFAL மற்றும் G-MAITRI ஆகிய இரண்டு முன்னெடுப்பு திட்டங்களையும் பிரதமர் துவக்கி வைத்தார்.

*பெண்கள் ரயில் (10)*

முழுவதும் பெண்களால் மட்டுமே ஒரு ரயிலை இயக்கி, சர்வதேச மகளிர் தினத்தை மத்திய ரயில்வே கொண்டாடி உள்ளது. இன்று மும்பை சத்ரபதி சிவாஜி மகாராஜ் முனையத்தில் இருந்து, சீரடிக்கு புறப்பட்டு சென்ற 22223 என்ற எண் கொண்ட வந்தே பாரத் ரயிலின் ஓட்டுநர், உதவி ஓட்டுநர், ரயில் மேலாளர், டிக்கெட் பரிசோதகர்கள், உணவக ஊழியர்கள் உள்ளிட்ட ரயிலை இயக்கியவர்கள் அனைவரும் பெண்களாக இருந்தனர். இந்த ரயில் 2017 ஆம் ஆண்டு முதல், நாட்டின் முதலாவது அனைத்து மகளிரால் இயக்கப்படும் மாட்டுங்கா ரயில் நிலையத்தையும் கடந்து சென்றது. இந்த வந்தே பாரத் விரைவு வண்டி குறிப்பிட்ட நேரத்தில் சீரடியை சென்றடைந்து மகளிர் அதிகாரமளித்தலில் ஒரு புதிய மைல் கல்லை எட்டியது.

*புதுச்சேரி மகளிர் தினம் (15)*

புதுச்சேரி அரசு மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை சார்பில் சர்வதேச மகளிர் தின விழா இன்று கரிக்கலாம்பாக்கத்தில் கொண்டாடப்பட்டது. துணை நிலை ஆளுநர் திரு கைலாஷ்நாதன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு, பல்வேறு துறைகளில் சாதனை புரிந்த பெண்களுக்கு நினைவு பரிசு மற்றும் சான்றிதழ்களை வழங்கினார்.

விழாவில் பேசிய துணை நிலை ஆளுநர் பெண்களை போற்றுகின்ற மரபு நமது மரபு என்றும், மனித சக்தியில் பாதி பெண்களாக இருக்கிறார்கள் என்றும் தெரிவித்தார். அவர் மேலும் பேசுகையில்.......

(வாய்ஸ்)

இந்த நிகழ்ச்சியில், முதலமைச்சர் திரு ரங்கசாமி, சட்டப்பேரவை தலைவர் திரு செல்வம், மகளிர் மற்றும் குழந்தைகள் மேம்பாட்டுத் துறை அமைச்சர் திரு ஜெயக்குமார், அரசு அதிகாரிகள், மற்றும் பல்வேறு சுய உதவிக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியில் பெண்

குழந்தைகளுக்கான வைப்பு நிதி திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு வங்கி கணக்கு புத்தகங்கள் வழங்கப்பட்டன.

முன்னதாக, முதலமைச்சர் திரு ரங்கசாமி விழாவில் பேசும்போது

(வாய்ஸ்)

*கலைமாமணி சரஸ்வதி*(6)

சர்வதேச பெண்கள் தினத்தை முன்னிட்டு புதுச்சேரியை சேர்ந்த ஓய்வு பெற்ற இசை ஆசிரியையும், மெல்லிசை பாடகியுமான கலைமாமணி. திருமதி சரஸ்வதி முரளி தமது அனுபவங்களை நேயர்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

(வாய்ஸ்)

திருமதி சரஸ்வதி முரளி மத்திய அரசின் கேந்திரிய வித்யாலயா பள்ளிகளுக்கான 2010 ஆம் ஆண்டின் சென்னை மண்டல நல்லாசிரியர் விருதும், 2012 ஆம் ஆண்டுக்கான தேசிய நல்லாசிரியர் விருதும், 2016 ம் ஆண்டுக்கான புதுச்சேரி மாநில அரசின் கலைமாமணி விருதும் பெற்றுள்ளார்.

கிரிக்கெட் (7)

சாம்பியன்ஸ் கோப்பைக்கான ஐசிசி ஆடவர் ஒரு நாள் சர்வதேச கிரிக்கெட் போட்டியின் இறுதி ஆட்டம் நாளை துபாயில் நடைபெற உள்ளது. துபாய் சர்வதேச கிரிக்கெட் மைதானத்தில் இந்திய நேரப்படி நாளை மதியம் 2.30 மணிக்கு துவங்க உள்ள இந்த ஆட்டத்தில், இந்திய-நியூசிலாந்து அணிகள் மோத உள்ளன. முன்னதாக நடைபெற்ற அரையிறுதி போட்டிகளில் இந்திய அணி, ஆஸ்திரேலிய அணியையும், நியூசிலாந்து அணி தென்னாப்பிரிக்க அணியையும் வீழ்த்தி இறுதிப் போட்டிக்கு முன்னேறின.